1975 மார்ச் 7]

8 மாதங்கள், 10 மாதங்கள் ஆகின்றன. இதனால் தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் பெரிதும் சிரமப்படுகிறார்கள். எனவே அவர்களுக்கு உடனடியாகக் கடன் வழங்குவதற்கு அரசு விரைவான நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பேரவைத் தலைவரவர்களே, கடன் கொடுத்தால் அது திரும்ப வாங்கப்பட வேண்டும். எனவே அவர்களுக்கு இருக்கும் திருப்பிக் கொடுக்கும் சக்தி முதலியவற்றைப் பரிசீலித்துத்தான் கடன் வழங்கப்படுகிறது. எனவே, அதுபற்றி உடனடியாகச் செய்ய இயலாது. ஆனால் பாதிக்கப்பட்டவர்களின் துயரைத் துடைப்பதற்காக அன்றோ அல்லது மறுநாளோ இந்த ரூபாய் இப்பொழுது துரிதமாக வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். வடிவேல்: தலைவரவர்களே, எரியும் வீடுகள் என்று பார்த்தால் பெரும்பாலும் ஏழை எளிய தாழ்த்தப்பட்டவர்களுடைய வீடுகளாகத்தான் இருக்கின்றன. உடனடியாக அவர்களுக்கு 80 ரூபாய் இனமாகக் கொடுத்தாலும் மறுபடியும் அவர்கள் வீடுகள் கட்டிக் கொள்வதற்காக 2,500 ரூபாய் முன்பணம் வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பேரவைத் தலைவரவர்களே, கடன் கொடுத்தால் அதைத் திரும்ப வாங்குவதில் இருக்கின்ற சங்கடங்கள் அவர்களுக்குத் தெரியும். அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தின்கீழ் இப்பொழுது அரசு ஒரு தொகையைக் கடனாகக் கொடுக்கிறது. எனவே, அப்படிப்பட்ட எரிகின்ற இடங்களில் அப்படிப்பட்ட முறையிலே வீடு கட்டிக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

கிராம சேவக்குகள்.

* 230 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராம சேவக்குகளில் முதல் நிலை, இரண்டாம் நிலை என்ற பாகுபாட்டை நீக்கி அரசு உத்தரவு பிறப்பித்து உள்ளதா?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர்வர்களே, கிராமசேவக்குகள் எத்தனை கிராமங்களுக்கு ஒருவர் அல்லது எவ்வளவு மக்கள் தொகை பகுதிகளுக்கு ஒருவர் என்று நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும், இப்பொழுதுள்ள வளர்ந்துவரும் சூழ்நிலையில், அலுவல் பணிகள் வளர்ந்து வரும் சூழ்நிலையில் கிராம சேவக்கு களின் எண்ணிக்கையை மேலும் விரிவுபடுத்த அரசு ஆவன செய்ய முன்வருமா? கிராம சேவக்குகள் நகரத்தில் தங்காமல் கிராமங் களிலே தங்குவதற்கான வகை செய்யப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: தலைவரவர்களே, கிராம சேவக்குகள் முதலிலே ஒரு பிளாக்கிற்கு 10 பேர் என்ற விதத்தில் போடப்பட்டிருந்தார்கள். அதை மீண்டும் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தீவிர விவசாயத் திட்டத்தின் கீழ் ஒரு பிளாக்கிற்கு 20 பேர் என்ற விதத்தில் போட்டிருக் கிறார்கள். மற்றும் நெல்லை, திருச்சி, மதுரை, செங்கற்பட்டு, கோவை ஆகிய இடங்களில் விவசாய அபிவிருத்திக்காக 15 பேர் என்ற விதத்தில் போட்டார்கள். மற்றபடி ஒவ்வொரு ஒன்றியத் திலும் 10 பேர் என்ற விதத்தில் இருக்கிறது. அவர்கள் எங்கே தங்குகிறார்கள் என்றால் அந்தந்த யூனியன்களின் எல்லைக்குள்ளே உள்ள இடங்களில்தான் தங்குகிறார்கள். அப்படி அவர்கள் தங்க வேண்டிய இடத்தில் தங்காமல் வேறு இடங்களில் தங்கினால் அது பற்றி அறிவித்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவரவர்களே, கிராம சேவக்கு களுக்குப் பதவி உயர்வு அளிப்பதாகத் தெரிகிறது. எந்தெந்த துறைகளில் பதவி உயர்வு கொடுத்து நியமனம் செய்யப்படு கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: தலைவரவர்களே, இதிலே கேட்டிருப்பது இரண்டாவது நிலையிலேயிருந்து முதல் நிலைக்குப் போகிறார்களா என்று கேட்டிருக்கிறார்கள். முதலில் 3:7 என்று இருந்தது. அதை மாற்றி 1:1 என்று சர்க்கார் 4—4—1974-ல் உத்தரவு போட்டார்கள். ஐந்து ஆண்டுகளில் இந்த விகிதாசாரம் செயல்படுத்தப்பட வேண்டும் என்று போட்டிருந்த உத்தரவை மாற்றி 2 ஆண்டுகள் என்று ஆக்கி, 1974-75-ம் ஆண்டில் 450 பேர்களுக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டது. 1975-76-ல் மீத முள்ள 427 பேர்களுக்கும் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது.

1975 மார்ச் 7]

திரு. என். டென்னிஸ்: *தலைவரவர்களே, இரண்டாம் நிலையி லுள்ள கிராம சேவக்குகள் முதல் நிலைக்கு வருவதற்கு மிகவும் காலதாமதமாகிறது. பலர் கிராம சேவக்குகளாகவே ரிடைய ராகும் நிலையும் ஏற்படுகிறது. ஆகவே, இந்தக் காலதாமதத்தைத் தவிர்க்க, இதைத் துரிதப்படுத்துவதற்கு அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: *தலைவரவர்களே, காலதாமதம் ஆகக்கூடாது என்பதற்காகத்தான் 1:1 என்று போட்டு, 5 ஆண்டுகளில் செயல்படுத்தப்பட வேண்டும் என்று போட்டிருந்ததை 2 ஆண்டுகள் என்று போட்டு பதவி உயர்வு சென்ற ஆண்டிலும் கொடுக்கப்பட்டது, இந்த ஆண்டிலே எல்லாம் அநேகமாக முடிந்து விடும்.*

திரு. கோவை செழியன்: *பேரவைத் தலைவரவர்களே, கிராம சேவக்குகளுக்கு உண்மையாகவே என்ன வேலை? சட்டபூர்வமாக அவர்களை நியமிக்கும்பொழுது என்னென்ன வேலைகளுக்காக நிய மிக்கப்படுகிறார்கள் என்பதற்கான குறிப்பு இருக்கிறதா? அப்படி என்றால் என்ன வேலைகள்? இன்றைக்கு அவர்களை கார்டுகள் கொடுப்பது, பூச்சி மருந்து தெளிப்பது போன்ற விவசாய சம்பந்தமான வேலைகளுக்குப் பயன்படுத்துகிறார்கள். அப்படி யென்றால் அவர்களுக்கு விவசாய அறிவு பெறும் விதத்தில் ஒரு வருஷ டிரெயினிங் கொடுத்து அப்படிப்பட்டவர்களை நியமிக்க அரசு உத்தேசித்து இருக்கிறதா? இந்த கிராம சேவக்கு என்ற பெயர் இந்தியிலே இருக்கிறது, அதை தமிழிலே மாற்றியமைக்க அரசு முன்வருமா?*

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: *தலைவரவர்களே, கிராம சேவக்குகள் என்பதை மாற்றி கிராம நல ஊழியர் என்று வைத்திருக்கிறோம். கிராமம் என்பதுதான் தமிழாக்கப்படவில்லை. அதை மாற்றி ஊர் நல ஊழியர் என்று மாற்றிக்கொள்ளலாம். அவர்களது வேலைகளைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு பிளாக் கிலும் கூட்டுறவுத் துறை, வேளாண்மைத் துறை, குடும்பக் கட்டுப் பாடு போன்ற எந்த எந்தத் துறைகளிலே கிராம அபிவிருத்திப் பணிகளைச் செய்கிறோமோ அத்தனை துறைகளிலேயும் இந்தக் கிராம சேவக்குகள் பணி புரிகிறார்கள்.*

TRUTH ALONE TRIUMPHS